1990 மார்ச் 31]

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீனியர் அவுஸ் சர்ஜன், போஸ்ட் கிராஜுவேட் போன்ற மருத்துவர்கள் பயிற்சி மருத்துவர்கள் தங்கும் விடுதியில் தங்கி இருப்பதால் பயிற்சி மருத்துவர்கள் தங்குவதற்கு அறைகள் இல்லாமல் மெடிகல் காலேஜிலே தங்கியுள்ளார்கள். இது குறித்து அரசுக்குத் தகவல் வந்துள்ளதா ? பயிற்சி மருத்துவர்கள் இல்லங்கள் மேற்கொண்டு விஸ்தரிக்கப் படும் குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன் :

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி உதவித்தொகையைப் பற்றியது. விடுதிகள் பற்றி தெரிய வேண்டுமானால் தனிக் கேள்வி கேட்கவும்.

கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டம்.

*7946—திரு. ஜெ. அசேன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராணிப்பேட்டையில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கான பொதுவான கழிவுநீர் (Common effluent Treatment plant) சுத்திகரிப்புத் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : இராணிப்பேட்டை தோல் பதனிடுவோர் சங்கமும், தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகமும் இணைந்து ஏற்படுத்தியுள்ள ''இராணிடெக்'' (Ranitec) என்ற நிறுவனம் மூலம் அமைக்கவிருக்கும் பொதுவான கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்குத் தேவையான நிலம் வாங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதி உதவி கிடைத்தவுடன் நிர்மாணப் பணிகள் தொடங்கப்படும்.

பீடித் தொழிலாளர் நல வாரியம்.

*5039—திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்களின் குறைகளைப் போக்க பீடித் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பீடித் தொழிலாளர்களின் நலனிற்காக 1976ஆம் ஆண்டு பீடித்தொழிலாளர் நல நிதிச் சட்டம் என்று ஒரு சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டுள்ளது. பீடித் தொழிலாளர் நல நிதியிலிருந்து மருத்துவ வசதி, கல்வி வசதி, வீட்டு வசதி முதலிய